ஈரோடு விற்பனைக்குழு அலுவலகம்,
ஈரோடு.

அலுவல் சாரா குறிப்பு

திருவள்ளுவராண்டு 2053/சுபகிருது/ஆடித்திங்கள்-6

ந.க.எண்.அ1/10096/2017, நாள்: 22.07.2022

பொருள்: பொது பணிகள் - வேளாண்மை-உழவர் நலத்துறை - வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகம் - கருணையடிப்படையில் செல்வி.த.கனிமொழி, இளநிலை உதவியாளராக ஈரோடு விற்பனைக்குழுவில் பணி நியமனம் செய்யப்பட்டமை - 29.04.2020 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து ஆணையிடப்பட்டமை - தொடர்பாக.

பார்வை: 1.இயக்குநர், வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகம், சென்னை அவர்களின் மே.கு.எண். விகுப.5/14120/2021, நாள்: 07.07.2022.
2.அரசாணை(3ப)எண்.87, வேளாண்மை-உழவர் நலத் (வே.வி.1) துறை, நாள்: 29.06.2022.

----------

பார்வை(2)இல் கண்டுள்ள அரசாணையின்படி செல்வி.த.கனிமொழி, இளநிலை உதவியாளருக்கு, இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்து ஆணையிடப்பட்டதன் தொடர்ச்சியாக மேற்சொன்ன அரசாணை அசலாக இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

மேலும், அசல் அரசாணையினைப் பெற்றுக்கொண்டமைக்கு உரிய ஒப்புதல் அளித்திட தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு

---------------

பார்வை (2)இல் ஆன அரசாணை

ஒம்/- இரா.சாவித்திரி,
வேளாண்மை துணை இயக்குநர் /
செயலாளர்.

பெறுநர் :

செல்வி.த.கனிமொழி,
இளநிலை உதவியாளர்,
தலைமை அலுவலகம்,
ஈரோடு விற்பனைக்குழு,
ஈரோடு.

/ உத்தரவுப்படி /

மேலாளர்.

22.7.22

வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண்
வணிக இயக்குநரகம், சென்னை-32.

வே.கு.கடித எண்.விகுப5/14120/2021 நாள்.07.07.2022

பார்வை : அரசாணை (3ப) எண்.87 வேளாண்மை – உழவர் நலத் (வேவி1) துறை நாள்.29.06.22

*****

தக்க நடவடிக்கைக்காக அனுப்பப்படுகிறது.

ஒம்/- எஸ்.சுரேஷ்குமார்,
வேளாண்மை விற்பனை மற்றும்
வேளாண் வணிக இயக்குநருக்காக

பெறுநர்
செல்வி.த.கனிமொழி, இளநிலை உதவியாளர், ஈரோடு விற்பனைக்குழு
ஈரோடு
வழி மற்றும் நகல் - வே.து.இ/செயலாளர், ஈரோடு விற்பனைக்குழு, ஈரோடு
*(தனியரின் பணிப்பதிவேடு உரிய பதிவுகள் மேற்கொள்ள*
கேட்டுக்கொள்ளப்படுகிறது)

நகல் - இருப்புக் கோப்பு

/உத்தரவின்படி/

கண்காணிப்பாளர்

சென்னை-32
04 JUL 2022

சுருக்கம்

பொதுப்பணிகள் – வேளாண்மை–உழவர் நலத் துறை – வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகம் – கருணையடிப்படையில் செல்வி த.கனிமொழி, இளநிலை உதவியாளராக ஈரோடு விற்பனைக் குழுவில் பணி நியமனம் செய்யப்பட்டமை – 29.04.2020 முற்பகல் முதல் பணி வரன்முறை செய்தல் – ஆணை– வெளியிடப்படுகிறது.

---

வேளாண்மை–உழவர் நலத் (வே.வி.1) துறை

அரசாணை (3ப) எண்.87

நாள்: 29.06.2022
திருவள்ளுவர் ஆண்டு 2053
ஆனித் திங்கள் 15 ஆம் நாள்

படிக்கப்பட்டவை:

1. அரசாணை (நிலை) எண்.100, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை, நாள் 01.08.2018.
2. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 23.01.2020
3. வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிக இயக்குநரின் கடித எண்.விகுப.4/14120/2021, நாள்.31.08.2021, 26.03.2022 மற்றும் 11.05.2022

------

ஆணை:

மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிக இயக்குநரின் கடிதத்தில், ஈரோடு விற்பனைக் குழுவில் அலுவலக உதவியாளராக பணிபுரிந்த திரு ப.தங்கவேல் அவர்கள் 20.10.2017 அன்று இயற்கை எய்தியதைத் தொடர்ந்து அன்னாரின் மனைவி திருமதி த.சுமதி அவர்கள் 26.03.2018 நாளிட்ட விண்ணப்பத்தில் இறந்த அரசு ஊழியரின் வாரிசுதாரர்களின் ஒருவரும், தன்னுடைய மகளுமான செல்வி த.கனிமொழி அவர்களுக்கு கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்குமாறு கோரியிருந்தார். அதனடிப்படையில், செல்வி த.கனிமொழி அவர்களும் தனக்கு கருணையடிப்படையில் பணி நியமனம் வழங்குமாறு 26.03.2018 நாளிட்ட விண்ணப்பத்தில் கோரியிருந்தார் என்றும், அவ்வாறு விண்ணப்பித்த நாளில் தனியர் உரிய கல்வித் தகுதி மற்றும் வயது போன்ற தகுதிகள் பெற்றிருந்ததைக் கருத்திற் கொண்டு, தன்னுடைய செயல்முறை ஆணை எண்.விகுப3/12973/2018, நாள். 01.04.2020–இன்படி ஈரோடு விற்பனைக் குழுவில் இளநிலை உதவியாளர் பணியிடத்திற்கு தனியருக்கு பணி ஒதுக்கீடு செய்து ஆணை வெளியிடப்பட்டது என்றும், அதனடிப்படையில் செயலாளர், ஈரோடு விற்பனைக்குழு அவர்களின் செயல்முறை ஆணை எண். அ1/10096/2017, நாள்.27.04.2020–இன்படி தனியருக்கு தற்காலிக இளநிலை

உதவியாளராக பணி நியமன உத்தரவு வழங்கப்பட்டு 29.04.2020 முற்பகல் முதல் தனியர் பணிபுரிந்து வருகிறார் என்றும் தெரிவித்து, தனியரின் கல்வித் தகுதி மற்றும் அதன் உண்மைத்தன்மை உள்ளிட்ட சான்றிதழ்கள் மற்றும் ஆவணங்களை அரசுக்கு அனுப்பி தனியரின் பணியினை அவர் பணியில் சேர்ந்த நாளான 29.04.2020 முற்பகல் முதல் வரன்முறை செய்து ஆணை வழங்குமாறு அரசைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

2) மேலே, முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்ட பணியாளர்களின் பணியினை பணிவரன்முறை செய்வது தொடர்பாக தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் இசைவு பெற வேண்டும் என்ற நடைமுறை கைவிடப்பட்டு ஆணை வெளியிடப்பட்டது.

3) மேலும், அதன் தொடர்ச்சியாக மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், கருணை அடிப்படையிலான பணி நியமனம் மற்றும் பணி வரன்முறை தொடர்பாக தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறையின் மூலம் ஒருங்கிணைந்த வழிகாட்டுதல்கள் வெளியிடப்பட்டுள்ளன. அவ்வழிகாட்டுதல்களின் அடிப்படையில் வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிக இயக்குநரின் செயற்குறிப்பினை அரசு கவனமுடன் பரிசீலனை செய்து, அதனை ஏற்று, ஈரோடு விற்பனைக்குழுவில் கருணை அடிப்படையில் தற்காலிக இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் செய்யப்பட்ட செல்வி த.கனிமொழி என்பவரின் பணியினை அப்பதவியில், அவர் அப்பதவிக்குரிய உடற் தகுதியைப் பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு, தனியர் பணியில் சேர்ந்த நாளான 29.04.2020 முற்பகல் முதல் வரன்முறைப்படுத்தி அரசு ஆணையிடுகிறது.

4) செல்வி த.கனிமொழி, இளநிலை உதவியாளர் என்பவரின் பணியானது 29.04.2020 முற்பகல் முதல் அப்பதவியில், வரன்முறை செய்யப்படுவதால், அவர் வருடாந்திர ஊதிய உயர்வு மற்றும் ஊதிய நிலுவைத் தொகை ஏதுமிருப்பின் அவற்றை விதிகளின்படி பெறத் தகுதியுடையவராவார் எனவும் அரசு ஆணையிடுகிறது.

5) இவ்வரசாணை, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறையின் அ.சா.எண்.10772/Q1/2022-1, நாள்.14.06.2022 மற்றும் மனிதவள மேலாண்மைத் துறையின் அ.சா.எண்.2617660/G1/2022-1, நாள். 23.06.2022-இல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**சி. சமயமூர்த்தி**
**வேளாண்மை உற்பத்தி ஆணையர்**
**மற்றும் அரசுச் செயலாளர்**

பெறுநர்
வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிக
இயக்குநர், சென்னை-32.

செயலாளர், ஈரோடு விற்பனைக்குழு, ஈரோடு.
(வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிக
இயக்குநர், சென்னை–32 மூலமாக)
மாநிலக் கணக்காயர், சென்னை – 18/(பெயரில்)
முதன்மை மாநிலக் கணக்காயர் (G & SSA) சென்னை–18
முதன்மை மாநிலக் கணக்காயர் (E & RSA) சென்னை–18
இருப்பிடத் தணிக்கை அலுவலர், முதன்மை மாநில
கணக்காயர் (பொது மற்றும் சமூகப்பிரிவு
தணிக்கை) அலுவலகம், தலைமைச் செயலகம், சென்னை–9.

நகல்

இயக்குநர், உள்ளாட்சி நிதிக்கணக்குகள் மற்றும்
தணிக்கைத் துறை, சென்னை–108.
தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை, சென்னை–9
மனித வள மேலாண்மைத் துறை, சென்னை–9.
வேளாண்மை–உழவர் நலத் (அநமு–3) துறை, சென்னை – 9.
இருப்புக்கோப்பு / உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்